# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 03.04.2025**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். (1) SA 3446/விசாரணை/E/2023 & (2) SA 7532/விசாரணை/E/2023**

| | | |
|---|---|---|
| திரு எஸ்.கே.சையத் ஜமால் | .. | மேல்முறையீட்டாளர் |
| /எதிர்/ | | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>திருவெறும்பூர் வட்டம்,<br>திருச்சி மாவட்டம் | .. | பொது அதிகார அமைப்பு |

******

**ஆணை**

1) இவ்வாணையத்தின் 24.01.2025 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் / திருச்சிராப்பள்ளி மேற்கு வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு ரா.மணி 25.03.2025 அன்று இவ்வாணையத்தில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2) அதில், ஆணையத்தின் உத்தரவுபடி திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டாட்சியர் அலுவலகம் வந்து ஆவணங்களை ஆய்வு செய்யும்படி மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து மனுதார் 18.03.2025 அன்று தங்கள் அலுவலகம் வந்து தென்னூர் கிராம “அ” பதிவேட்டினை ஆய்வு செய்து 5 பக்கங்கள் கொண்ட நகலினை பெற்றுக் கொண்டார் என தெரிவிக்கப்பட்டு,

அதன் நகலும், அதை பெற்று கொண்டு மனுதாரர் வழங்கிய மனநிறைவு கடிதத்தின் நகலும் இணைக்கப்பட்டிருந்தது. அந்த அடிப்படையில், இந்த இரண்டு மேல்முறையீட்டு மனுக்களையும் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**(ஒம்/- (பி.தாமரைக்கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். (1) SA 3446/விசாரணை/E/2023 & (2) SA 7532/விசாரணை/E/2023**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம்,
திருச்சி மாவட்டம்

திரு எஸ்.சையத் ஜமால் த/பெ சையது அப்துல் கரீம்,
எண்.39, மீர் ஹசனுல்லாஷா தர்கா காலனி,
பென்ஷனர் தெரு, தென்னூர்,
திருச்சி - 620 017

Copy to: File
CR/PA